**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 156/2024**
**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பிரபாகரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. நாராயணசாமி** | **Calling** | : | **காவல் ஆய்வாளர், சாணார்பட்டி காவல் நிலையம்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **41** |
| | | | **Dated** | : | **25.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1 முதல் 4, 6 முதல் 8 வரையிலான எதிரிகள் ஆஜர். 5–ம் எதிரி நீதிமன்றக் காவலில் உள்ளார் அவருக்காக அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

கூடுதல் சாட்சி – 1, **திரு. பிரபாகரன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு அசா. 3 ஆக விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை :–**</u>

நான் தற்போது திண்டுக்கல் சாணார்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் அவர்களையும், காவல் ஆய்வாளர் திரு. தங்க முனியசாமி அவர்களையும் எனக்கு நன்கு தெரியும். அவர்கள் இருவரும் தற்போது வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுடைய கையெழுத்து மற்றும் கையொப்பங்கள் எனக்கு நன்கு பரிட்சையம். அசா. 1 மற்றும்

அசா.2 எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக சாட்சியம் அளிக்காததாலும், வழக்கின் காலதாமத்தை தவிற்கும் பொருட்டும் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் அவர்கள் 24.08.2023 ம் தேதி 14.15 மணிக்கு சாணார்பட்டி காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, துவரங்குறிச்சியைச் சேர்ந்த சண்முகம் மகன் வேலுமணி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்துமூலமான புகார் மனுவைப் பெற்றுள்ளார். **புகார் மனு அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகார் மனுவின் அடிப்படையில் நிலையக் குற்ற எண். 287/2023, சட்டப்பிரிவுகள் 392, 397, 323, 506(ii) இ.த.ச.வின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. உதவி ஆய்வாளர் அவர்கள் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்துள்ளார். ஆய்வாளர் அவர்கள் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 24.08.2023 ம் தேதி சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜேம்ஸ் மற்றும் அந்தோணி குரூஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, சம்பவ இடத்தை விளக்கும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவர் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ. 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. இவ்வழக்கு சாட்சிகளான வேலுமணி, செல்லப்பாண்டி, ராஜ்குமார், ரவி, அந்தோணி குரூஸ் மற்றும் ஜேம்ஸ் ஆகியோர்களை தனித் தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 24.08.2023 ம் தேதி மாலை 18.00 மணிக்கு ஆய்வாளர் அவர்கள் சிலுவத்தூர், காம்பார்பட்டி, அதிகாரிபட்டி ஆகிய இடங்களில் எதிரிகளைத் தேடியபோது, பண்ணைப்பட்டி பிரிவு அருகே வாகன

சோதனை செய்தபோது, TN 57 BE 7755 பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி சிவனேசன் என்பவரை பிடித்து விசாரித்தபோது, அவர் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறியவரை காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது, சாட்சிகள் அருண்குமார் மற்றும் பூமிநாதன் ஆகியோர் முன்னிலையில் அவர் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும், மற்ற எதிரிகளும் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், சம்பவத்தின்போது பயன்படுத்திய TN 57 BE 7755 பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தையும், இருசக்கர வாகனத்தின் டேங்க் கவரில் மறைத்து வைத்திருந்த மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தியையும் எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே 19.15 மணிக்கு அதே இடத்தில்வைத்து, அதே சாட்சிகள் முன்னிலையில் TN 57 BE 7755 பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தையும், சுமார் 34 செ.மீ. நீளமுள்ள கத்தி – 1 யையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். **மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. TN 57 BE 7755 பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தின் 4 எண்ணிக்கை கொண்ட புகைப்படங்களின் வரிசை **சா.பொ. 1 மற்றும்** மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி **சா.பொ. 2** ஆக குறியீடு செய்யப்பட்டுகின்றன. பின்னர் 07.10.2023 ம் தேதி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்பேரில் எதிரி வடிவேலு என்பவரை விராலிபட்டி பிரிவு காலை 08.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து, சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் தங்கச்சாமி ஆகியோர் முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலும் இன்றி

தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும், மற்ற எதிரிகளும் ஈடுபட்டதாகவும், தன்னை அழைத்துச் சென்றால் சம்பவத்தின்போது கொள்ளைடியத்த இரண்டு செல்போன்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு வங்கமனூத்து எதிரி ராபின் வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த blue color vivo செல்போன் ஒன்றையும், ஆரஞ்சு நிற செல்போன் ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஒப்புதல் வாக்மூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான ஆறுமுகம், தங்கச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேற்படி blue color vivo செல்போன் **சா.பொ. 3** மற்றும் ஆரஞ்சு நிற செல்போன் **சா.பொ. 4** ஆக குறியீடு செய்யப்படுகின்றன. பின்னர் 01.12.2023ம் தேதி இவ்வழக்கின் தலைமறைவு எதிரிகளைத் தேடி வந்தபோது கிடைத்த தகவலின்பேரில் ஆய்வாளர் அவர்கள் அன்றைய தினம் காலை 05.00 மணிக்கு RMTC பேருந்து நிறுத்தம் அருகே TN 20 CA 1337 பதிவு எண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்த நபரை பிடித்து விசாரித்தபோது, அவர் மனோஜ்குமார் என்றும், அவர் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறியவரை காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது, அவர் சாட்சிகள் லூயிஸ்அந்தோனி பீட்டர் மற்றும் அந்தோனி ஆரோக்கிசாமி ஆகியோர் முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஓர் ஒப்புதல்

வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும், மற்ற எதிரிகளும் ஈடுபட்டதாகவும் குற்ற சம்பவத்தின்போது பயன்படுத்திய இருசக்கர வாகனத்தையும், கத்தியையும் ஆஜர் செய்வதாக கூறினார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே காலை 06.00 மணிக்கு RMTC பேருந்து நிறுத்தம் அருகே எதிரி ஆஜர் செய்த இருசக்கர வாகனத்தையும், கத்தியையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். **மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. TN 20 CA 1337 இருசக்கர வாகனத்தின் மூன்று புகைப்படங்களின் வரிசை **சா.பொ. 5 மற்றும் கத்தி சா.பொ. 6 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான லூயிஸ் அந்தோனி பீட்டர் மற்றும் அந்தோனி ஆரோக்கியசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் 06.12.2023 ம் தேதி இவ்வழக்கின் தலைமறைவு எதிரிகளை தேடி வந்தபோது கிடைத்த தகவலின்பேரில் ஆய்வாளர் அவர்கள் அன்றைய தினம் காலை 06.30 மணிக்கு செல்போன் டவர் லோகேசன் அருகே இவ்வழக்கின் எதிரி சுஜாதா என்பவரை முத்தம்பட்டியில் வைத்து காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது, அவர் சாட்சிகள் வேல்முருகன் மற்றும் மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும், மற்ற எதிரிகளும் ஈடுபட்டதாக கூறியுள்ளார். அவர் புகார்தாரர் வேல்மணியுடன் பேசுவதற்கு பயன்படுத்திய செல்போனை ஆஜர் செய்வதாக கூறினார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே காலை 11.30 மணிக்கு

சாணார்பட்டி காவல்நிலையத்தில் வைத்து பச்சை கலர் Redme செல்போன் ஒன்றை சாட்சிகள் முன்னிலையில் எதிரி ஆஜர் செய்ய கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். **மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி Redme செல்போன் **சா.பொ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான வேல்முருகன் மற்றும் மணிகண்டன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இவ்வழக்கின் 2—ம் எதிரி ஆனந்த் என்பவரை 25.08.2023ம் தேதி 14.30 மணிக்கு பண்ணைப்பட்டி, சந்தனவர்த்தினி ஆற்றின் மேற்கு கரையில் வைத்து கைது செய்து தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கின் எதிரி அருண்பாண்டி என்பவரை 10.09.2023ம் தேதி காலை 09.00 மணிக்கு அதிகாரிபட்டி பேருந்து நிறுத்தம் அருகே கைது செய்து தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கின் எதிரி ராபின் என்பவரை 25.09.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு வங்கமனூத்து சர்ச் அருகே கைது செய்து தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கின் எதிரி முத்து முருகேசன் என்பவரை 06.12.2023ம் தேதி காலை 07.30 மணிக்கு குடுமியான்மலை, எதிரியின் வீட்டின் அருகே கைது செய்து தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்குச் சொத்துக்களை நான்கு படிவம் — 91 களின் மூலமாக தனித்தனியே நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். மேற்படி நான்கு படிவம் — 91 முறையே **அ.சா.ஆ. 15 முதல் 18 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. சம்பவத்தில் காயம்பட்ட அசா. 1க்கு சிகிச்சை அளித்த திண்டுக்கல் அரசு

மருத்துவமனை மருத்துவர் திரு. திலீப்குமார் என்பவரையும், திருச்சி தனியார் மருத்துவமனை மருத்துவர் திரு. பாபு என்பவரையும் தனித்தனியாக விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளார். மேற்படி மருத்துவச் சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ. 19 மற்றும் 20 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 392, 397, 323, 506(ii) இ.த.ச.வினை, சட்டப்பிரிவுகள் 392, 397, 323, 506(ii) r/w 34, 120(b) இ.த.ச.வாக பிரிவு மாறுதல் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ. 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் அவர்கள் வாதியிடம் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து, அவருடைய புலன் விசாரணையை முடித்துக் கொண்டு வழக்கின் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 392, 397, 323, 506(ii) r/w 34, 120(b) இ.த.ச.வின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>அனைத்து எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

முதல் விசாரணையில் சொன்னது போன்று, சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் அசா. 1 புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் மனு பின்னிட்டு வழக்கிற்காக தயாரிக்கப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று சாட்சிகள் 161 குவிமுச வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில், எவ்வித சம்பவமும் நடக்கவில்லை

என்றும், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வழக்கு சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பொய்யாக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் பார்வை மகஜரில் தேதி மட்டுமே குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றாலும், நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரிதான். அதற்காக சிறிது இடம் விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் தயார் செய்த படிவம் – 91 காலதாமதமாகத்தான் தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதில் குறிப்பிட்டுள்ள வழக்குச் சொத்துக்களின் நிறம், வடிவம், அமைப்பு ஆகியவை மாறுபட்டுள்ளது என்றாலும் சரிதான். வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 25.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.03.25 15:00:54 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.